## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2012–2013–ஆம் ஆண்டு நிதிநிலை அளிக்கையில் இடம் பெற்றுள்ள அறிவிப்பின்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு இரண்டடுக்கு கட்டில்கள் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1)த் துறை**

**அரசாணை (நிலை)எண். 110** **நாள். 08.10.2012.**

**படிக்கப்பட்டது.**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின்
கடித எண். சி2/1421/2012, நாள். 17.5.2012 மற்றும் 5.6.2012.

--------

**ஆணை:-**

2012–2013–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதிகளில் மாணவர் வசதிக்கென கட்டில்கள் வழங்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கருத்துருவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ / மாணவியர்களின் நலனுக்கென மொத்தம் 1238 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 692 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 540 விடுதிகளும், சிறுபான்மையினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 6 விடுதிகளும் இயங்கி வருகின்றன என்றும் அவற்றுள் 87 பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளும், 43 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல கல்லூரி விடுதிகளும், 5 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளும் அடங்கும் என்றும், 2011–2012–ஆம் நிதியாண்டில் 25 கல்லூரி விடுதிகள், 3 சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகள் (25+3=28), திறக்க உத்தரவிட்டதில் 25 கல்லூரி விடுதிகளையும் சேர்த்து மொத்தம் 160 விடுதிகள் செயல்பட்டு வருகின்றது எனவும்,

160 கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்கள் தங்கள் கல்வியினை நல்ல முறையில் பயின்று தேர்ச்சி பெறுவதற்காக விடுதிகளில் நூலக வசதி, பாடக்குறிப்பு புத்தகம் (Reference Book), இன்வர்ட்டர், விளையாட்டு கருவிகள், குடிநீர் சுத்திகரிக்கும் கருவி மற்றும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி போன்ற வசதிகள் இதுவரையில் வழங்கப்பட்டு வருவதாகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அவர்கள் தூங்குவதற்காக கட்டில் வசதிகள் ஏதும் செய்து தரப்படவில்லை என்றும், அவர்கள் தங்கும் அறைகளில் பாய் அல்லது போர்வைகள் விரித்து தூங்க வேண்டிய நிலையுள்ளது என்றும், அவர்களுக்கு கூடுதல் வசதி ஏற்படுத்திடும் பொருட்டும், இடநெருக்கடியினை குறைக்கும் பொருட்டும் இரும்பிலான இரு அடுக்கு கொண்ட படுக்கை வசதி அளிக்கலாமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற துறையின் ஆய்வுக் கூட்டத்தில் கருத்து வைக்கப்பட்டது என்றும், 2012–2013–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதிகளிலும் மாணவர் வசதிக்கென கட்டில்கள் வழங்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இரும்பிலான இரண்டு அடுக்கு கட்டில்கள் மற்றும் மரத்திலான இரண்டு அடுக்கு கட்டில்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை அவ்விடுதிகளுக்கு தேவைப்படும் இரண்டு அடுக்கு கட்டில்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கான செலவின விவரத்தினை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

<u>**இரும்பிலான இரண்டடுக்கு கட்டில்கள் தேவைப்படும் விடுதிகளுக்கான செலவின விவரம்:**</u>

| விடுதிகள் விவரம் | **இரும்பிலான 2 அடுக்கு கட்டில்கள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ள விடுதிகள் எண்ணிக்கை** | **விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை** | **தேவைப்படும் இரும்பிலான 2 அடுக்கு கட்டில்கள் எண்ணிக்கை** | **இரும்பிலான ஒரு 2 அடுக்கு கட்டில்களுக்கு ரூ.8,455/– வீதம் தேவைப்படும் தொகை** |
|---|---|---|---|---|
| பி.வ. | 69 | 5850 | 2939 | ரூ.2,48,49,245/– |
| மி.பி.வ. | 21 | 1565 | 788 | ரூ.66,62,540/– |
| சீ.ம. | 12 | 900 | 452 | ரூ.38,21,660/– |
| சி.பா. | 1 | 50 | 25 | ரூ.2,11,375/– |
| **மொத்தம்** | **103** | **8365** | **4204** | **ரூ.3,55,44,820/–** |

<u>மரத்தாலான இரண்டடுக்கு கட்டில்கள் தேவைப்படும் விடுதிகளுக்கான செலவின விவரம்</u>

| விடுதிகள் விவரம் | மரத்தாலான 2 அடுக்கு கட்டில்கள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ள விடுதிகள் எண்ணிக்கை | விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | தேவைப்படும் மரத்தாலான 2 அடுக்கு கட்டில்கள் எண்ணிக்கை | மரத்தாலான ஒரு 2 அடுக்கு கட்டில்களுக்கு ரூ.32,256/– வீதம் தேவைப்படும் தொகை |
|---|---|---|---|---|
| பி.வ. | 2 | 100 | 50 | ரூ.16,12,800/– |

4. எனவே, 2012–2013–ஆம் நிதியாண்டில் மொத்தம் 103 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 8365 மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 4204 எண்ணிக்கையில் இரும்பிலான இரண்டடுக்கு கட்டில்களையும், குளிர்பிரதேச பகுதிகளில் இயங்கும் 2 பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளில் 100 மாணவர்கள் பயன்பெறும் வகையில் 50 எண்ணிக்கையில் மரத்தாலான இரண்டடுக்கு கட்டில்களையும் வழங்கிட அரசுக்கு ஏற்படும் தொடரா செலவினமாக ரூ.3,71,57,620/–க்கு (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து ஒரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்தி அறுநூற்று இருபது மட்டும்) ஒப்புதலும், இரும்பிலான கட்டில்கள் வழங்கப்பட வேண்டிய பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் மற்றும் மரத்தாலான கட்டில்கள் வழங்கப்பட வேண்டிய மேற்படி விடுதிகளின் பெயர்பட்டியல் மற்றும் ஒவ்வொரு விடுதிக்கும் வழங்கப்பட வேண்டிய இரண்டடுக்கு கட்டில்கள் எண்ணிக்கைக்கு ஒப்புதலும் மற்றும் 4204 இரும்பிலான இரண்டு அடுக்கு கட்டில்களையும், 50 மரத்தாலான இரண்டு அடுக்கு கட்டில்களையும் அரசாணை எண். 401, நிதி சம்பளம் துறை, நாள். 29.8.2007–ன்படி டான்சி நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பொருள் பட்டியலின்படி கொள்முதல் செய்யவும் ஆணை பெற்றுத் தருமாறு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2012–2013–ஆம் நிதியாண்டில் கட்டுமானப்பணி முடியும் தருவாயில் உள்ள 5 விடுதிகளையும் சேர்த்து 103 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 8365 மாணவ / மாணவியர்களுக்கு 4204 எண்ணிக்கையில் இரும்பிலான இரண்டடுக்கு கட்டில்களையும், குளிர்பிரதேச பகுதிகளில் இயங்கும் 2 பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 100 மாணவர்களுக்கு 50 எண்ணிக்கையில் மரத்தாலான இரண்டடுக்கு கட்டில்களையும் வழங்கிட ஏதுவாக தொடரா செலவினமாக ரூ.3,71,57,620/–க்கு (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து ஒரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூற்று இருபது மட்டும்) நிதி ஒப்புதலும், இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டில்கள் வழங்கப்பட வேண்டிய விடுதிகளின் பெயர் பட்டியல் மற்றும் ஒவ்வொரு விடுதிக்கும் வழங்கப்பட வேண்டிய இரண்டடுக்கு கட்டில்களின்

எண்ணிக்கைக்கு ஒப்புதலும் மற்றும் 4204 இரும்பிலான இரண்டடுக்கு கட்டில்களையும், 50 மரத்தாலான இரண்டடுக்கு கட்டில்களையும், டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்திட ஒப்புதலும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்".

(து.தொ.கு. 2225–03–277–JA-2408) **– ரூ.2,64,62,045/–**

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்".

(து.தொ.கு. 2225–03–277–KA-2407) **– ரூ.66,62,540/–**

**சீர்மரபினர் நல விடுதிகள்**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது 101 – சீர்மரபினர் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH – சீர்மரபினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்".

(து.தொ.கு. 2225–80–101–JH-2402) **– ரூ.38,21,660/–**

**சிறுபான்மையினர் நல விடுதிகள்**

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 24 பொருள்களும் வழங்கலும்".

(து.தொ.கு. 2225–03–277–LA-2406) **– ரூ.2,11,375/–**

------------

**ரூ.3,71,57,620/–**

------------

7. இது ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது I) துறையில்

தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு பொது I)த் துறைக்கு அனுப்பி வைக்கும்படி மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை துணைமானியக் கோரிக்கையில் சேர்த்திட ஏதுவாக உரிய விளக்கக் குறிப்பினை உரிய தருணத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 44/கூ.செ./2012, நாள். 02.08.2012–இன்படி பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 848 (எண்ணூற்று நாற்பத்தெட்டு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்:
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை – 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை– 2.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18 /(பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 1), சென்னை – 18 /(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 2), சென்னை – 18 /(பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாவட்ட வருவாய் அலுவலர் (க.சீ.), மதுரை.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

**நகல் :**
முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை – 9.
நிதித் (பி.மி.பி./ வ.செ.பொது1/ வ.செ. பொது 2) துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3/சிநஆபி) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண். 110, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 08.10.2012—ன்படி இரும்பிலான கட்டில்கள் வழங்கப்பட வேண்டிய பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளின் விவரம்**

| வரிசை எண் | மாவட்டம் | விடுதியின்பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | தேவைப்படும் கட்டில்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி. திருநகர் | 145 | 73 |
| 2 | சென்னை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி தி.நகர் (இ) பெருங்குடி (தற்போது சைதாப்பேட்டை (பழையது )) | 140 | 70 |
| 3 | சென்னை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சென்னை. (தற்போது சைதாப்பேட்டை (புதியது)) | 85 | 43 |
| 4 | சென்னை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, அசீஸ் நகர். சென்னை 24 தற்போது லேடி வெலிங்டன் வளாகம், சென்னை—5 (பழையது) | 90 | 45 |
| 5 | சென்னை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை —5 தற்போது லேடி வெலிங்டன் வளாகம், சென்னை—5 (புதியது) | 80 | 40 |
| 6 | காஞ்சிபுரம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம். | 110 | 55 |
| 7 | காஞ்சிபுரம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, செங்கல்பட்டு. | 50 | 25 |
| 8 | காஞ்சிபுரம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, காஞ்சிபுரம். | 65 | 33 |
| 9 | திருவள்ளூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி. | 120 | 60 |
| 10 | வேலூார் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம். | 60 | 30 |
| 11 | வேலூார் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி. | 55 | 28 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | வேலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, காட்பாடி, | 60 | 30 |
| 13 | திருவண்ணாமலை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திருவண்ணா மலை. | 60 | 30 |
| 14 | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கடலூர். | 105 | 53 |
| 15 | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சிதம்பரம். | 60 | 30 |
| 16 | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர். | 60 | 30 |
| 17 | கடலூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிதம்பரம். | 75 | 38 |
| 18 | விழுப்புரம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, விழுப்புரம். | 60 | 30 |
| 19 | கிருஷ்ணகிரி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி. | 190 | 95 |
| 20 | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சேலம். | 120 | 60 |
| 21 | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, ஆத்தூர். | 65 | 33 |
| 22 | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சேலம்–8. | 85 | 43 |
| 23 | சேலம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மணக்காடு, சேலம் | 75 | 38 |
| 24 | நாமக்கல் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல். | 55 | 28 |
| 25 | நாமக்கல் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல். | 80 | 40 |
| 26 | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர். | 145 | 73 |
| 27 | கோயம்புத்தூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சிங்காநல்லூர். | 60 | 30 |
| 28 | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு. | 55 | 28 |
| 29 | ஈரோடு | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கோபிச்செட்டி பாளையம். | 100 | 50 |
| 30 | திருப்பூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர். | 120 | 60 |
| 31 | திருப்பூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, உடுமலைப்பேட்டை. | 50 | 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| **32** | திருச்சிராப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கன்டோன்மெண்ட், திருச்சி. | 135 | 68 |
| **33** | திருச்சிராப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை, திருச்சிராப்பள்ளி. | 140 | 70 |
| **34** | திருச்சிராப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, முசிறி. | 60 | 30 |
| **35** | திருச்சிராப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் நல பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் விடுதி, துவாக்குடி. | 50 | 25 |
| **36** | திருச்சிராப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் நல ஐ.டி.ஐ. மாணவர் விடுதி, திருவரம்பூர். | 70 | 35 |
| **37** | திருச்சிராப்பள்ளி | கல்லூரி மாணவியர் விடுதி , ஸ்டேட் பாங்க் காலனி, கிராப்போர்டு, திருச்சி. | 70 | 35 |
| **38** | திருச்சிராப்பள்ளி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி , கிராப்போர்ட், திருச்சி. | 55 | 28 |
| **39** | அரியலுார் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, அரியலூார். | 60 | 30 |
| **40** | கரூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கரூர். | 70 | 35 |
| **41** | கரூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கரூர். | 80 | 40 |
| **42** | புதுக்கோட்டை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, புதுக் கோட்டை– I. | 155 | 78 |
| **43** | புதுக்கோட்டை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை – II. | 155 | 78 |
| **44** | புதுக்கோட்டை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை–III. | 70 | 35 |
| **45** | புதுக்கோட்டை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, புதுக்கோட்டை–I. | 95 | 48 |
| **46** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி (BC1) சரபோஜி கல்லூரி வளாகம், தஞ்சாவூர். | 180 | 90 |
| **47** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி (BC2) சரபோஜி கல்லூரி வளாகம், தஞ்சாவூர். | 75 | 38 |

| | | | | |
|---|---|---|---|---|
| **48** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி (BC1), குந்தவை நாச்சியார் கல்லூரி வளாகம், தஞ்சாவூர். | 85 | 43 |
| **49** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி (BC2), கணபதி நகர், தஞ்சாவூர். | 100 | 50 |
| **50** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி (BC1)பக்தபுரி வீதி, கும்பகோணம் | 70 | 35 |
| **51** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, (BC2) அரசு கல்லூரி வளாகம், கும்பகோணம். | 70 | 35 |
| **52** | தஞ்சாவூர் | பிற்படுத்தப்பட்டோர் நல அரசு இசைக் கல்லூரி மாணவியர் விடுதி, திருவையாறு. | 50 | 25 |
| **53** | திருவாரூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர். | 65 | 33 |
| **54** | திருவாரூர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, மன்னார்குடி. | 65 | 33 |
| **55** | நாகப்பட்டினம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மயிலாடுதுறை. | 75 | 38 |
| **56** | மதுரை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சாத்தமங்கலம், மதுரை. | 120 | 60 |
| **57** | மதுரை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, மேலூர். | 110 | 55 |
| **58** | மதுரை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருநகர், மதுரை. | 70 | 35 |
| **59** | மதுரை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சாத்தமங்கலம், மதுரை. | 50 | 25 |
| **60** | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, காந்தி கிராமம். | 60 | 30 |
| **61** | இராமநாதபுரம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம். | 105 | 53 |
| **62** | சிவகங்கை | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிவகங்கை. | 85 | 43 |
| **63** | விருதுநகர் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர்விடுதி, விருதுநகர். | 75 | 38 |

| | | | | |
|---|---|---|---|---|
| **64** | திருநெல்வேலி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி பேட்டை, திருநெல்வேலி. | 80 | 40 |
| **65** | திருநெல்வேலி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, காந்திநகர், பாளையங்கோட்டை. | 70 | 35 |
| **66** | தூத்துக்குடி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி. | 55 | 28 |
| **67** | கன்னியாகுமரி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, நாகர்கோவில். | 55 | 28 |
| **68** | கன்னியாகுமரி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, அகஸ்தீஸ்வரம். | 85 | 43 |
| **69** | கன்னியாகுமரி | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சுங்கான்கடை. | 50 | 25 |
| **மொத்தம்** | | | 5850 | 2939 |

**மரத்தாலான கட்டில்கள் வழங்கப்பட வேண்டிய பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளின் விவரம்**

| வரிசை எண் | மாவட்டம் | விடுதியின்பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | தேவைப்படும் கட்டில்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **1** | உதகமண்டலம் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கூடலூர். | 50 | 25 |
| 2 | திண்டுக்கல் | பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கொடைக்கானல். | 50 | 25 |
| | | **மொத்தம்** | 100 | 50 |

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சைதாப்பேட்டை. | **75** | **38** |
| 2 | சென்னை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, கிண்டி. | 105 | **53** |
| 3 | காஞ்சிபுரம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு. | **50** | **25** |
| 4 | வேலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, வேலூர். | **65** | **33** |
| 5 | வேலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாபேட்டை. | **60** | **30** |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, செய்யாறு. | 70 | 35 |
| 7 | திருவண்ணாமலை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திருவண்ணாமலை. | 60 | 30 |
| 8 | கடலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாச்சலம். | 160 | 80 |
| 9 | கடலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, நெய்வேலி | 65 | 33 |
| 10 | விழுப்புரம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம். | 105 | 53 |
| 11 | கிருஷ்ணகிரி | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி. | 75 | 38 |
| 12 | சேலம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, சேலம். | 50 | 25 |
| 13 | பெரம்பலூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, பெரம்பலூர். | 75 | 38 |
| 14 | கரூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கரூர் (2005–06). | 70 | 35 |
| 15 | தஞ்சாவூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம். | 70 | 35 |
| 16 | திருவாரூர் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திருவாரூர். | 75 | 38 |
| 17 | நாகப்பட்டினம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, மயிலாடுதுறை. | 85 | 43 |
| 18 | நாகப்பட்டினம் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, மயிலாடுதுறை. | 80 | 40 |
| 19 | திண்டுக்கல் | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, பழனி. | 55 | 28 |
| 20 | சிவகங்கை | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை. | 65 | 33 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | தூத்துக்குடி | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, நாகம்பட்டி. | 50 | 25 |
| **மொத்தம்** | | | **1565** | **788** |

**சீர்மரபினர் நல விடுதிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருச்சி | சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கிராப்போர்டு, திருச்சிராப்பள்ளி | 65 | 33 |
| 2 | தஞ்சாவூர் | சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர். | 90 | 45 |
| 3 | இராமநாதபுரம் | சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதி, இராமநாதபுரம். | 65 | 33 |
| 4 | இராமநாதபுரம் | சீர்மரபினர் நல கல்லூரி மாணவர் விடுதி, பரமகுடி. | 60 | 30 |
| 5 | இராமநாதபுரம் | சீர்மரபினர் நல கல்லூரி மாணவர் விடுதி, கமுதி. | 80 | 40 |
| 6 | புதுக்கோட்டை | சீர்மரபினர் நல கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை. | 95 | 48 |
| 7 | புதுக்கோட்டை | சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதி, புதுக்கோட்டை –1. | 85 | 43 |
| 8 | மதுரை | கள்ளர் கல்லூரி மாணவியர் விடுதி, சொக்கிகுளம், மதுரை (இருப்பு) மூன்றுமாவடி. | 60 | 30 |
| 9 | மதுரை | கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, கே. புதுார், மதுரை (இருப்பு) கருப்பாயூரணி. | 120 | 60 |
| 10 | தேனி | கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, தேனி. | 60 | 30 |
| 11 | மதுரை | கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, செக்காணூரனி, மதுரை. | 60 | 30 |
| 12 | திருநெல்வேலி | சீர்மரபினர் நல தொழிற்பயிற்சி நிலைய மாணவர் விடுதி, வீரகேரளம்புதுார். | 60 | 30 |
| மொத்தம் | | | **900** | **452** |

**இரும்பிலான இரண்டடுக்கு கட்டில்கள் வழங்கப்பட வேண்டிய சிறுபான்மயினர் நல கல்லூரி விடுதிகளின் விவரம்**

| வரிசை எண் | மாவட்டம் | விடுதியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | தேவைப்படும் கட்டில்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **சிறுபான்மையினர் நல விடுதிகள்** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருச்சி | சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திருச்சி. | 50 | **25** |
| **மொத்தம்** | | | 50 | **25** |

**தங்க கலியபெருமாள்,**
**அரசு செயலாளர்.**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்.